ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்
திகதி 2021.01.15

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2020 திசெம்பர்

## தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2020 திசெம்பரில் விரிவடைந்தன

**நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக இயல்புநிலை அடைவதிலிருந்து நன்மையடைந்து தயாரிப்பு கொ.மு.சுட்டெண்ணானது 2020 திசெம்பரில் தொடர்ந்தும் அதிகரித்து மாதாந்த அடிப்படையில் 61.2 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** இதற்கு உற்பத்தி, புதிய கட்டளைகள், தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் முக்கிய காரணமாக அமைந்தது.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 61.2**

**2020 நவெம்பருடன் ஒப்பிடுகையில் 3.6 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு**

உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகள் துணைச் சுட்டெண்களில் குறிப்பாக உணவு மற்றும் குடிபானத் தயாரிப்புத் துறையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஒட்டுமொத்த சுட்டெண்ணும் மேம்படுவதற்குப் பிரதானமாகப் பங்களித்தது. அதேவேளை, தொழில்நிலை துணைச் சுட்டெண்ணும் 2020 திசெம்பர் மாதகாலப்பகுதியில் அதிகரித்துது. அதிகரித்த கேள்வியுடன் மேம்பட்ட தொழிற்சாலை தொழிற்பாடுகளுக்கு மத்தியில் ஊழியர்களை தாம் சிறப்பாகப் பயன்படுத்தக்கூடியதாகவிருந்தது என உணவு மற்றும் குடிபானம் தயாரித்தல் மற்றும் புடவைகள் மற்றும் அணியும் ஆடைத் துறைகளிலுள்ள சில பதிலிறுப்பாளர்கள் குறித்துக்காட்டினர்.

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | நவெ | திசெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **57.6** | **61.2** | **+** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| | | **கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 61.8 | 63.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 52.2 | 60.1 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 48.9 | 51.1 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 47.2 | 55.6 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 77.0 | 75.3 | - | நீட்சியடைகின்றது மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண், புதிய கட்டளைகளுக்கும் உற்பத்திகளின் விரிவாக்கத்திற்கும் இசைவாகவும் அதேபோன்று எதிர்வருகின்ற மாதங்களில் குறிப்பாக வருகின்ற சீன புதுவருட விடுமுறை காரணமாக வழங்கல் சங்கிலி இடையூறுகளை எதிர்பார்த்து உத்தேசிக்கப்பட்ட இருப்புகளைத் திரட்டுதலுடனும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. மேலும், நிரம்பலர் விநியோக நேர துணைச் சுட்டெண்ணானது திசெம்பரில் மெதுவான வேகத்தில் நீட்சியடைந்தது. பிரதானமாக கொழும்புத் துறைமுகத்தில் தொடர்ச்சியான தாமதங்களின் காரணமாக தமது கப்பற்பொருட்கள் மீள் அட்டவணைப்படுத்தப்பட்டு தேவையான பொருட்கள் வந்து சேர்வதில்/ அப்புறப்படுத்துவதில் கணிசமான தாமதங்களை ஏற்படுத்தின என பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

நாட்டினுள் அதேபோன்று முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்புவதற்கான எதிர்பார்க்கையுடன் அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மேலும் மேம்பட்டன.

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2020 நவெம்பரிலிருந்து 0.1 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2020 திசெம்பரில் 53.8 இனைக் கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய வலயம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு 2020 திசெம்பரில் உயர்வான வீதத்தில் தொடர்ந்தும் அதிகரித்த அதேவேளை சீனாவின் கொ.மு.சுட்டெண் மெதுவான வீதத்தில் விரிவடைந்தது. கொவிட்-19 இன் தொடர்ந்தும் ஏற்பட்ட பாதகமான தாக்கத்தின் மூலம் ரஷ்யாவின் தயாரிப்பு கொ.மு.சு மாதகாலப்பகுதியில் மெதுவான வீதத்தில் வீழ்ச்சியடைந்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2021 சனவரி 15இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**தொடர்ச்சியாக இரண்டு மாதங்களாக 50.0 கொண்ட அடிப்படை மட்டத்தினைவிட குறைவான சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்திருந்ததன் பின்னர் பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2020 திசெம்பரில் 55.6 இனை அடைந்து வளர்ச்சிப் பாதைக்கு திரும்பியது.** இவ்வதிகரிப்பானது 2020 நவெம்பருடன் ஒப்பிடுகையில் புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள், நிலுவையிலுள்ள பணி மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட விரிவடைதல்கள் மூலம் ஏற்பட்டு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாம் அலை மூலம் பாதிக்கப்பட்டிருந்த பணிகள் துறையில் மீட்சியொன்றினை எடுத்துக்காட்டியது.

2020 திசெம்பரில் புதிய வியாபாரங்கள், குறிப்பாக நிதியியல் பணிகள் மற்றும் காப்புறுதி துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் மேலும் அதிகரித்தன.

பணிகள் துறை வியாபார நடவடிக்கைகள், தொடர்ச்சியாக இரண்டு மாதங்களாக வீழ்ச்சியடைந்ததன் பின்னர் 2020 திசெம்பரில் அதிகரித்தன. பிரதானமாக விடுமுறை பருவகாலத்தின் போது உள்நாட்டு சுற்றுலா வளர்ச்சியின் காரணமாக மாதகாலப்பகுதியில் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் துணைத் துறை அதிகரிப்பொன்றினை அனுபவித்தது. மேலும், 2020 திசெம்பர் காலப்பகுதியில் கட்டுப்பாடுகள் ஓரளவிற்குத் தளர்த்தப்பட்டதன் காரணமாக போக்குவரத்து மற்றும் மொத்த மற்றும் சில்லறை வர்த்தக துணைத் துறைகளில் வியாபார நடவடிக்கைகள் விரிவடைந்தன. மேலும், நிதிப் பணிகள் மற்றும் வேறு தனிப்பட்ட பணிகள் துணைத் துறைகளும் 2020 திசெம்பரில் நடவடிக்கைகளில் அதிகரிப்பொன்றினை அனுபவித்தன. எனினும், கப்பற்சரக்கு அனுப்புதல் மற்றும் இறக்குமதி வர்த்தகத்திலுள்ள பதிலிறுப்பாளர்கள் இறக்குமதி கட்டுப்பாடுகள் மீது தமது கரிசனைகளை எடுத்துக்காட்டினர்.

தொழில் நடவடிக்கைகளில் அதிகரிப்புக்கு இசைவாக சில நிறுவனங்கள் புதிய ஊழியர்களை சேர்த்துக்கொள்ளத் தொடங்கியமையினால் 2020 திசெம்பரில் தொழில்நிலையின் வீழ்ச்சி மிதமடைதலொன்றினைப் பிரதிபலித்து தொழில்நிலை துணைச் சுட்டெண் அதிகரித்தது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் தொழில் நடவடிக்கைகளுக்கு ஒப்பீட்டளவில் குறைவான இடையூறுகளைச் சுட்டிக்காட்டி நிலுவையிலுள்ள பணிகள் 2020 திசெம்பரில் குறைவொன்றினைக் காண்பித்தன.

| மாறி | நவெ | திசெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **48.8** | **55.6** | + | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 50.5 | 55.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கை | 43.0 | 64.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| தொழில்நிலை | 39.0 | 44.4 | + | வீழ்ச்சியடைகின்றது , மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 58.5 | 51.6 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 53.0 | 62.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாவது அலை மூலம் பாதிக்கப்பட்டிருந்த பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி தொடர்பில் அதிகரித்த சாதகமான எண்ணப்பாங்குடன் 2020 திசெம்பரில் எதிர்கால வியாபார நடவடிக்கைகள் மீதான எதிர்பார்க்கைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன.

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 55.6**

2020 நவெம்பருடன் ஒப்பிடுகையில் 6.8 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு 2020 நவெம்பரில் 52.2 இலிருந்து 2020 திசெம்பரில் 51.8 இற்கு வீழ்ச்சியடைந்து உலகளாவிய பணி நடவடிக்கைகளில் விரிவடைதலில் மெதுவடைதலை சமிக்ஞைப்படுத்துகின்றது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 திசெம்பரில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்ததை எடுத்துக்காட்டிய அதேவேளை, யப்பான் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்[1], சனவரி 15, 2021 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.